OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 JAN 1913
MADRAS

உ

கடவுள் துணை.

புகழேந்திப்புலவர்

264
1 . B

இயற்றிய

# குருக்ஷேத்திரமாலை.

இது

சீகாழி

நடேசப்பிள்ளையால்

பரிசோதிக்கப்பட்டு,

திருப்பாதிரிப்புலியூர்

ஸ்ரீ கிருஷ்ணவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை அணா 1.

1912.

Q2:417
1912
L20469

உ

சிவமயம்.

# குருக்ஷேத்திரமாலை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
MADRAS.
264
1 · 13

## காப்பு.

மன்னவர்கள் தர்மரைவர் வனவாசத் தேயிருந்து
நன்னெறிசேர் குருக்ஷேத்திரன் நாரணற்குச் செய்தகுற்றம்
அன்னைதந்தை யானதர்மர் அர்ச்சுனர்கள் காத்தபுகழ்
முன்னுரைக்க வைங்கரனார் மூத்தடிகள் போற்றிடுவோம்.

## நூல்.

### துதி.

கருத்தன் திருமகனே காரான மேனியனே.
சத்திக் கணபதியே சண்முகற்கு மூத்தோனே
வள்ளி மடமயிலாள் மாறாட்டம் பேசினதைத்
தெள்ளியதோர் வேலவர்க்குச் சேர்த்த விநாயகரே
மைக்கடலில் மாயவற்கு மருமகனாய் வந்தோனே
கைக்கடங்காத கனியமிர்தங் கொண்டோனே
சுத்தமுள்ள சுந்தரிதான் தொந்தமுடன் பெற்றெடுத்த
வித்தகனாய் மன்மதற்கு வேண்டுமக னாகவந்தோன்
குருக்ஷேத்திரமாலை கோலமுடன் யான்பாட
விருப்பமுடன் வந்து விநாயகரே முன்னடைவீர்
மருப்பானை வெள்ளி மலையிருக்கும் ஈஸ்வரனார்
திருப்பாதந் தெண்டனிடச் செல்லுங்கால் மாயவற்கு
என்னை யறியாமல் இடுக்கண்வந்த நியாயமதைத்
தன்னை யறியாமற் றான்வந்த குற்றமதை
நன்மையுள்ள ஈஸ்வரரும் நான்முகனுங் காவாத
அன்னைதந்தை யானதர்மர் அருச்சுனனுங் காத்தபுகழ்
புன்மையுடன் யான்பாடப் புலவீர் பொறுத்தருள்வீர்

## கைலையிலிருந்து திரும்பல்.

ஞானமது சிறந்த நல்லகுரு க்ஷேத்திரனார்
தானமுடனே சர்வே சுரன்பாதம்
நித்தமவன் தப்பாமல் நிஷ்டையுடன் பூஜைபண்ணிச்
சித்த மகிழ்ந்து சிவன்பதத்தைப் பூசைபண்ணி
மெத்தெனவே பூந்தேரில் வீரமுடன் ஏறியவன்
பல்லியங்கள் பாடப் பலவிருது தான்முழங்க
நல்லதொரு சங்கீதம் நாகசுரம் ஊதிவர
வல்லதொரு வீணைசர மண்டலங்களேமுழங்க
செல்லகுரு க்ஷேத்திரனார் தேரேறிப் போகையிலே
வண்ணமுள்ள மாயவனார் மகாதே வரைநோக்கி
கண்ணன் மனமகிழ்ந்து கடுந்தவசு செய்திருந்தார்
நன்னெறிசேர் ஞானமுடன் நாரணனார் நிற்கையிலே
வாகாக வேதான் மரகதத்தைப் பார்க்காமல்
ஆகாசத் தேர்மேல் இருந்து மரகதத்தை
தன்னை யறியாமல் தான்விழுத்தான் பூமியிலே
இதுவே சமயமென்று ஏற்றமுள்ள வாயுவவன்
சூறு வளிபோலே சுழற்றி மரகதத்தைக்
கோணுகி நின்ற குலவண்ணன் தன்கரத்தில்
ஆயர் முகுந்தர் அச்சுதனார் தன்கரத்தில்
சென்றுவிழத் தள்ளிவிடத் திடுக்கிட் டவரேங்கி
இருந்து மனத்திலெண்ணி ஏங்கிவிழி நீர்சொரிய
என்செய்வேன் இவ்விதிக்கு ஏற்றமுள்ள ஈஸ்வரரே
முன்செய்த தீவினையோ முக்கணனே யென்றுசொன்னார்
அந்த வகையை யறிந்தகுரு க்ஷேத்திரனும்

## பிரமனிடஞ்செல்லல்.

---

ஆதி சிவனே யரனே எனப்புலம்பி
சேதி தனையறிந்து சிவசிவா என்றழுது
தந்தியுடன் மாயவனார் சங்கரிக்கு முன்னேதான்
எந்தன்உயிர் காப்பார் யாவரென்று தாநினைந்து
எழில்சேரும் மாயவனார் எதிராளி நான்முகனை
வரைசேர்ந்த நம்வினையை வாராமற் காப்பாயென்று
அந்நேரம் மாரன்மகன் அரனடிக்கு முன்னேதான்
சென்று பிரமனடி சீர்பாதந் தெண்டனிட்டு
ஈரேழு லோகம் இனிதாய்ப் படைத்தோனே

ஆயிரம் வேதம் அரைநொடியிற் கற்றேனே
அன்று கடலே அடைத்தோ னவன் றனக்கு
இன்று ஒருபிழைதான் என்னு லறியாமல்
வந்ததுகாண் நான்முகனே மாயவனர் என்னுயிரைக்
கொன்று விடாதபடி கோத்தவனே காத்திடென்று
முந்தப் படைத்தவனே முட்டமுடி போகவென்னை
இந்தத் தருவாயில் என்னைக்காக்க வேணுமென்றான்
அப்போது வேதியரும் அவர்கலங்கி என்னசொல்வார்
செப்பமுடன் காக்கில் சிவன்காப்பா ரல்லாமல்
மற்றொருவர் காக்க வகையேதுங் கூடாது
ஏற்றமுள்ள நான்முகனும் எனக்குமுடி யாதெனவே
வந்தகுரு க்ஷேத்திரனை வாவென் றருகழைத்து
எந்த வகையாலும் உனக்கிடர்தான் வாராது
வெந்தழலாய் மாயவற்கு வெகுகுற்ற மாயிருக்கும்
சுந்தரியாள் தன்மகனே தோற்றமுள்ள க்ஷேத்திரனே
நம்மா லுனைக்காக்க முடியாது கண்டாயே
இந்தவச னங்கேட்டு ஏற்றமுள்ள க்ஷேத்திரனர்
என்றனக்கு மின்று எழுத்துமுடி வென்றுசொல்லி
புந்திநொந்து தானலைந்து போகுமிடம் யாதெனவே

## இயமனிடஞ் செல்லல்.

இந்த வுலகுதன்னில் இயமனல்லோ கொல்கிறவன்
இப்போது க்ஷேத்திரனும் மாமறலி தன்னடியில்
செப்பமதாய்ச் சென்று சேவடியைப் பூண்டுகொண்டான்
என்னுடைய பங்கில் இருக்கும் யமதர்மா
சொன்னவண்ணம் மாயவற்குத் தோஷமது செய்துவந்தேம்
தேவரீர் பாதமீதில் சேர்ந்தேன் இனியுமக்கு
ஏவலாய் நான்திரிய என்னைநீர் காத்திடென்றான்
ஆவதுபோல் என்னுயிரைக் காருமென்றான் அஞ்சாமல்
அன்று எமதர்மர் ஆனதிருஷ்டி நாட்டமுடன்
நன்றியுடன் காக்கில் நான்காக்கக் கூடாது
வாரா யெனவழைத்து வாய்த்தகுரு க்ஷேத்திரனை
சீரான மாயவற்குச் செய்தகுற்றம் பாராமல்
என்னையுங் கொல்வன் எரிப்பன்ஒரு நாழிகையில்
மன்னவனே நீதான் மகாதேவர் தன்னடியில்
சென்றுவிழுந்தால் சிவன்காப்பான் அல்லாது
மன்றிலுள்ள தேவர்களும் வானவரும் காய்பதுதான்
வானத் திடிவிழுந்தால் வைக்கோற்போர் தாங்கிடுமோ

கானமலை விழுந்தால் கைக்குடையோ தாங்குவது
ஆனதிக ரொக்கும் அடைந்தவுன்னைக் காப்புதென்றார்

## பரமசிவனிடஞ்செல்லல்.

வெள்ளிமலை ஈசுரனார் மீதடியில் போய்விழுந்தான்
ஒள்ளியதோ ருந்தனக்கு உண்மையாய்த் தானுரைத்தார்
போகாயென வுரைத்தான் புதுமையுள்ள மாமறலி
மார்புறவே தானும் மண்ணின்மேலேவிழுந்தான்
கார்சடையிற் கங்கை யணிந்தவரே போற்றி என்றான்
செவ்வலரிக் காயிற் சிறந்தவனே போற்றி என்றான்
வல்லமா காளியுடன் வாதாடி போற்றி என்றான்
தில்லை வனத்திற் சிறந்தாடி போற்றி என்றான்
ஏகவஸ்து வான ஈஸ்வரனே போற்றி என்றான்
முன்னாளிற் றேவர் முனிவர்களுந் தான்பிழைக்க
அன்றால முண்டதுபோல் அடியேன் உயிர்பிழைக்க
இன்றுதான் காத்தருள்வாய் ஏற்றமுள்ள ஈஸ்வரரே
மண்ணையுண்ட மாயவற்கு வலுகுற்றம் செய்துவந்தேன்
கண்ணப்பர் வேடனைத்தான் காத்ததுபோல் காருமென்றான்
மெத்த மனமகிழ்ந்து விரிசடையாய் போற்றியென்றான்
சற்றே நகைத்தவரும் தாமுறவே யெண்ணியவர்
அத்திகிரி நாதர் அவன்முகம் பார்த்துரைப்பார்
மார்க்கண் டனுக்காக மாமறலி தன்னையன்று
இறக்க வுதைத்தவனும் இறந்துவிட்டான் கண்டாயே
உன்னைநான் வைத்திருந்தால் ஒருநொடியில் மாயவரும்
கோபமதா யுன்னைக் கொன்றிடுவர் சக்கரத்தால்
சாப மிடுவோம் சபித்திடுவோம் நாமவரை
அப்போ திறப்பார் அவனியுள்ளோர் தான்கெடுவார்
இப்பாரில் தேவர்களும் இருஷிகளும் தாமிறப்பார்
முப்புரத்தை நாம்நகைத்து முடுகிவரும் வேளையிலே
வேகமுடன் மாயவனார் வெள்விடைய தாகவந்து
நம்மையவர் தாங்கினர்காண் நாரா யணர்நமக்கு
இம்மைதனில் மைத்துனராய் இனிதிருப்பா ரம்மானை
ஆனதொரு மாயவற்கு அபராதம் செய்துவந்தாய்
ஞாயமது சொன்னோம் நம்மிடத்தில் குற்றமில்லை
என்றுரைத்த போதே ஏங்கிகுரு க்ஷேத்திரனும்
நன்றியுள்ள ஈஸ்வரனார் நாரணற்குச் செய்தகுற்றம்
தேவரீர் காக்கத் திருவுள மல்லாது
பூவுலகில் யார்காப்பார் போற்றரிய ஈஸ்வரரே

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
13 JAN 1913
MADRAS.

## அருச்சுனனிடம் செல்லல்.

நாவலகில் பஞ்சவர்கள் நாடாண்டு காடுறைந்து
தேவேந் திரனார்க்குத் திறமான பிள்ளையுந்தான்
மாவேந்த னான அருச்சுனனார் மாயவற்கு
மைத்துன னு மானவன்காண் வார்த்தையொன் றுசொல்லுகிறேன்
பத்தியுடன் காப்பான் பரிந்தோடி யவ்வனத்தில்
விற்றொழிற்கு நல்ல மிகுத்ததொரு சேவகன்காண்
பொறுமை யுடையான்காண் போந்தாரைக் காப்பான்காண்
சிறுமை யுடையான்காண் சேர்ந்தார்க் கினியவன்காண்
ஆகிலுநாம் சொல்லுகிறோம் அருச்சுனனார் தன்னுடனே
போகிலு நீயங்கே போகடுக என்றுரைத்தான்
அப்போதுகுரு க்ஷேத்திரனு மானதொரு ஈஸ்வரரை
செப்பமுடன் தெண்டனிட்டுத் திரும்பியே யோடலுற்றான்
நாடியவன் போகையிலே நல்ல வருச்சுனனும்
தேடியதோர் வேட்டைபோய்த் திரும்பி வருகையிலே
சென்றவன்தான் தெண்டனிட்டுச் சீர்பாதம் பூண்டுகொள்ள
நன்றியுடன் வந்தகுறை நானறியச் சொல்லுமென்றான்
நான்வந்த காரியந்தான் நன்றியுடன் சொல்லுகிறேன்
தானடைந்து என்னுயிரைத் தப்பாமல் காப்பேனென்று
வாகா யருச்சுனரே வார்த்தையரு ளென்றுரைத்தார்
உம்வாக்கும் பிசகாமல் வார்த்தையரு ளென்றுரைத்தார்
இந்தஆகா சம்பூமி அறியவுரை யருச்சுனரே
தர்ம்ம குலக்கொழுந்தே தர்ம்மகுல சேகரனே
ஆதரவு சொல்லி யடைந்தவரைக் காருமையா
அப்போ தருச்சுனனும் ஆயன் திருவாணை
செப்பமுள்ள வெள்விடையோன் சிவனார் திருவாணை
ஆகாசம் பூமி யழகு கதிராணை
ஆயன் வரினும் அரிய சிவன்வரினும்
நியாயமுள்ள தேவர்களும் நற்புவியோர் வந்தாலும்
காப்பன்நான் என்றுரைத்துக் கைபோட்டுத் தான்கொடுத்தான்
தீர்க்கமுடன் சொல்லிச் செப்புவாய் வந்ததெல்லாம்
தாகந் தெளிந்து தன்மயக்கந் தான்தீர்ந்து
சோபந் தெளிந்து சோதிமுகம் வேர்துடைத்து
வாகுடைய க்ஷேத்திரனே வந்தகுற்றஞ் சொல்லுமென்றார்
ஆண்டவனார் பேரிருக்கும் அசையா விசயாகேள்
தாண்டவமா டுஞ்சிவனார் தன்னடியிற் பூசைபண்ணி
பாவையர்கள் சூழப் பரிவான தேரேறி
ஆவலுடன் போகையிலே ஆயன் தவசிருந்தார்
பூவுலகைப் பாராமல் போட்டேன் மரகதத்தை

நாவுலகில் தஞ்சுபண்ணும் நாராயணர்கரத்தில்
நாராயணர் கரத்தில் ஒன்றாய் விழுந்ததுவே
வாராத துக்கமெல்லாம் வந்தடைந்த தென்று சொல்லி
தான்புலம்பி நானுஞ் சங்கரிப்பா ரென்றுசொல்லி
நான்முகனார் தம்மிடத்தில் போனே னவர்தாமும்
தம்மாலே காக்கத் தரியாது என்றுரைத்தார்
மங்கியே நானோடி மாமறலி தன்னடியில்
தெண்டனிட்டுச் சீர்பாதம் சென்னியின்மேல் பூண்டுகொண்டேன்
ஆன வுயிர்கொல்லும் அழகுதர்ம ராசாவே
தானெடுத்து என்னுயிரைச் சாத்திரத்தி னூற்பார்த்து
ஈச னொழிய எங்களால் காப்பதுதான்
நேசமுள்ள நாய்புலிமுன் நேராடி நிற்பதொக்கும்
கன்றி யுரைத்தான்காண் காரியமன் தன்னைவிட்டு
நன்றியுட னேவிசயா நல்லதொரு மேருவினில்
மூக்கண் ணுடையார் மூர்த்தி தவமிருந்தார்
அக்கணமே சென்று அரனடியைச் சேவைபண்ணி
போற்றியிரு கைதொழுது பூமியிலே தான்விழுந்து
ஆத்திகொன்றை சூடினவர் ஆனகுரு க்ஷேத்திரனை
மெத்த மனமகிழ்ந்து மேலான ஈஸ்வரரும்
குற்றமது செய்துவந்த கொள்கையது சொல்லியபின்
திகழுமொரு ஈஸ்வரரும் திருமால் தனைத்தேடி
சதியாக உன்னையவர் சக்கரத்தி னால்வதைப்பார்
நான்தடுக்கக் கேளார் நல்லதொரு மாயவரும்
தான்கோப மாகச் சபித்திடுவோம் நாமவரை
அப்போ திறப்பார் அவனியுள்ளோர் தாங்கெடுவார்
இப்பாரில் தேவர்களும் இருஷிகளும் தாமிறப்பார்
மெத்த மனத்தாபம் மேலுலகுங் கீழுலகும்
கொத்துக் குலைந்து குலவரைகள் தாங்கெடுமே
என்றுசொல்லி ஈஸ்வரரும் ஏற்றமுள்ள தர்மர்தம்பி
முன்றில் விசயன் முசியாமல் காப்பனென்றே
உள்ளமகிழ்ந் தீஸ்வரனார் உமதிடத்தி லேவினர்காண்
வெள்ளம்வரும் ஆற்றைப்போல் விசயானா னோடிவந்தேன்
தேவரீர் பாதத்திற் சேர்ந்தேன் இனியுமக்கு
ஏவலாய் நான்திரிவன் என்னையுநீர் காருமென்றான்
வில்லி யருச்சுனனும் மிகவழன் றங் கேதுரைப்பான்
நல்லதொரு தேவர்களும் நான்முகனுங் காவாத
வல்லவர்கள் காவாத மடிக்குழந்தை நாயடியேன்
பேசறியேன் சற்றுமொரு பொருளறியா நாயடியேன்
சண்டை முகந்தனையே சமர்த்தறியா நாயடியேன்
விற்சமர்த்துங் கைச்சமர்த்தும் விருதறியா நாயடியேன்

பேரறிவா னென்றென்னைப் பெருமையுடன் சொன்னாரோ
ஏகபர வஸ்துவுன்னை யேவினரோ என்னிடத்தில்
அவ்வார்த்தை கேட்டே அடியேனிடந் தேடிவந்தாய்
மெய்வாய்த்த மாயவற்கு வலுதுக்கஞ் செய்துவந்தாய்
ஆயர் தமக்கு அவகேடு செய்துவந்தாய்
ஆராய்ந்து பாராமல் ஆமென் றுரைத்துவிட்டேன்
துரியோ தனனமக்குச் செய்த வினைகளெல்லாம்
அரியோடுங் கானகத்தை ஐவருந்தான் நாங்களிங்கே
குருநாடு விட்டுக் குறியா வனத்தில்வந்தோம்
மருவாரும் மாயவனார் வாய்த்ததுணை யென்றிருந்தோம்
நாங்க ளிருக்கிறது நம்மாணை நிச்சயங்காண்
நீங்குவரு முன்னாள் துரியோ தனனாலே
கல்லைப்பெண் ணாக்கிவைத்த கார்வண்ணண் தன்னருளால்
மல்லைப் புவியிலுந்தான் மாளுவது நிச்சயங்காண்
என்செய்வே னிவ்விதிக்கு ஏற்றமுள்ள ஈஸ்வரரே
வன்செய்த மாயவற்கு வார்த்தைப் பிழையுரைத்தேன்
எப்போதும் நாம்தாம் இறப்பதுவுந் திண்ணமல்லோ
தப்பாத சொல்லுடையான் தர்மர்குல மல்லவோதான்
இச்சையுடன் மாயன் இயல்கருடன் வந்தாலும்
வாசமுடன் பொருது மாளுவது நிச்சயங்காண்
இந்த மொழியுரைத்து இடையூறு பேசினவர்
தன்னைவேண் டாதவனைத் தழுவினர்க் கொக்குமென்றார்
மன்னவனார் தர்மரது வாக்கறிய நாம்போக
குன்றனைய தோளான் குருக்ஷேத் திரன்றனையும்
வெம்பி யருச்சுனனும் மிகமகிழ்ந்து ஆண்மைசொல்லி
சென்றுதிருத் தர்மரது சீர்பாதந் தெண்டனிட்டார்
நின்றகுரு க்ஷேத்திரனை நேராகத் தானிறுத்த
கைகுவித்து நின்றான் கலக்கமுடன் க்ஷேத்திரனும்
நின்றவொரு க்ஷேத்திரனை நிலைபெரிய தர்மர்கண்டு
என்வந்தாய் மன்மதற்கு ஏற்றமுள்ள புத்திரனே
வண்புகழு நல்ல மகீப னருச்சுனனும்
நம்முடைய மாயவனார் நாரா யணர்தமக்குத்
தன்னை யறியாமல் தான்வந்த குற்றமதை
வேதா விதியும் மிகவுநல்ல மாமறலி
நாதரொளி யீஸ்வரனார் நாரணற்குச் செய்தகுற்றம்
வந்தவொரு தீவினையை மாற்றவொண்ணா தென்றுசொல்லி
கந்தமுள்ள மேருவினில் காருறையு மீஸ்வரனார்
ஆனபுகழ் தர்மர்தம்பி அருச்சுனனார் காப்பரென்று
சுற்றமுள்ள க்ஷேத்திரற்குச் சொன்னவுடன் இங்குவந்து
மெத்தவலு வாய்நானும் வேட்டைபோய்க் கானகத்தில்

திரும்பி வருகையிலே தேடியவ னோடிவந்து
பரும்பவள வாயும் பருமுத்துப் பல்லொளியும்
வெம்பியவன் தானும் மெய்யுறவே தான்வணங்கி
தர்மர்க் கபயமென்று தாளிணையைப் பூண்டுகொண்டான்
அப்போது அடியேன் அரனை நினைந்துகொண்டு
உம்பர் வரினும் உலகளந்தோன் றான்வரினும்
தம்பிநான் காப்பனென்று தப்பாமற் கையோட்டேன்
வந்த வகைகாண்டா வனமெரித்தான் சொல்லியபின்
எந்த வகையண்ணா என்றுரைக்கத் தம்பியுந்தான்
கர்த்தன் செயலொழிந்து காண்டா வனமெரித்தான்
சித்தந் தனிலேற்கச் செயலுண்டோ தம்பியரே.
முன்னறிவும் பின்னறிவும் முதலறிவுந் தானறிந்தால்
செம்மையுடன் நாமும் சிவனடிமை தானலவோ
பொம்மல்செறி தம்பியரே புகழுமக்குத் தானேது
ஆதரவாய் நம்மை யுடைந்தவனுக் காகவுந்தான்
நீதி யுடனிறந்தால் நிகருண்டோ தம்பியரே
பள்ளிகொள்வா ராலும் பரமனா ராலும்
தெள்ளிய இருவருந்தான் செவிபடத் தான்பொருது
வாராரு மாயவனார் மகாதேவர் கையாலே
ஏரார் தமக்காக இறந்தாலு மீடேற்றம்
மன்றி லெவர்தமக்கும் வார்த்தைப் பிழையுரைத்தால்
குன்றுதவில் ஈஸ்வரர்க்குக் குற்றமது தானலவோ
ஆதிபர மேஸ்வரர்க்கு ஐயர்தமக் கேற்காது
ஆகிலுநாம் பஞ்சவர்க ளபயமிட்டு வந்தவரைப்
போகென்று சொல்வதுதான் புகழோ எனவுரைத்தார்
அஞ்சாத நெஞ்சுடைய அர்ச்சுனா நீகேளு
எப்பொழுதும் நாமெல்லா மிறப்பதுவும் நிச்சயங்காண்
தப்பாமற் சொர்க்கமது தான்கிடைக்கும் தம்பியரே
என்று மனத்திலெண்ணி யிளையவற்குப் புத்திசொல்ல
அன்றுதன்மர் சொற்கேட்டு அர்ச்சுனனுந் தான்மகிழ்ந்து
பூரித் துடலமெங்கும் புளகிதங்கள் தானாகி
ஈசன் வரினும் இயமதர்மன் தான்வரினும்
கூசாமற் சற்றும் குறைவறவே தான்பொருது
ஆசார மானதொரு ஐவருந்நாம் பட்டோமென்றால்
ஒக்க விறந்தாலு முனக்கதினாற் சேதமுண்டோ
தக்கருரு க்ஷேத்திரற்குத் தானுரைத்து அர்ச்சுனரும்
மெத்தெனவே எண்ணியவர் மேம்பாடு தானுரைத்து
சித்தங் கலங்காமல் சிறந்திருந்தா ரம்மானை

சீரான மாயவனுர் செபங்கள் முடித்ததற்பின்
நேரான கையால் நிறைந்த மரகதத்தைக்
கண்டந்த மாயவனுர் கண்கள் எரியெழவே
திண்டுமுண்டு செய்தவனைச் சிந்தைதனி லேநினைந்து
வாகு பொருது மதனன் குருக்ஷேத்திரனைப்
போகு மிடங்களெல்லாம் புந்திதனி லேநினைந்து
தாபரித்தா ரெவ்விடமோ தற்காத்தா ரெவ்விடமோ
தீர்க்கமதாய்ப் பார்க்கிற் சிறப்புடைய தோர்பிரமன்
குன்றுதலில் ஈஸ்வரனுர் கோத்தவனுர் தம்மிடத்தில்
வென்றியுடன் போனதுவும் மிக்கவர்கள் சொன்னதுவும்
மீண்டுவந்து தர்மர் விசய னிலக்காகப்
பாண்டவர்தள் தஞ்சமென்று பரிந்தவர்கள் சொன்னதுவும்
வந்த வகையெல்லாம் வகையாக மாயவரும்
சிந்தையனல் மூழ்கிச் சிவக்கவெங்குந் தான்பார்த்து
அண்டர்க் கதிபதியாம் அமரர்கோன் றானுமல்ல
மூன்றுலகு மாள்கின்ற முக்கோடி தேவரல்ல
வேதப் பொருளான விதிபிரமன் றானுமல்ல
நாதர்தமைத் தாங்குகின்ற நந்தீ சுரரல்ல
பாசுபதன் றன்னடிமை பாரியமன் றானுமல்ல
வாசம் பொருவும் மகாதேவர் தானுமல்ல
காளி யுடனடித்த காளகண்டர் தானுமல்ல
ஆலால முண்டதொரு அரியபர வஸ்துவல்ல
பூவுலகிற் பஞ்சவரில் பேடியெனும் பார்த்தனவன்
மேவுகுரு க்ஷேத்திரற்கு மேம்பா டுரைப்பதுவோ
தாபரிக்க நல்ல சமர்த்துடைய சேவகனே
என்றுரைத்து மாயவரும் இருகண்கள் பொறிபறக்க
அதிகோப மாக ஆனதொரு மாயவரும்
சதியாக நாமவரைச் சங்கரித்தோ மானாலும்
இந்த வுலகிலுள்ள இமையவர்க்கும் எற்காதே
அந்தமுள்ள நாரதனுர் அப்போ தருகழைத்து
முன்வந்த காரியந்தான் முனிதமக்கே தான்தெரியும்
தாபரித்த சேதி தமக்கே தெரிந்திருக்கும்
அரவுக் கமுதம் அளித்தகதை மெய்யாச்சு
பஞ்சவர்க்குச் செய்தநன்றி பாழ்நிலத்திற் போட்டுவிட்டேன்
கன்னெஞ்ச னானதொரு கடியகுரு க்ஷேத்திரனை
அஞ்சாமல் வைத்திருந்தால் ஐவரையுங் கொன்றுழக்கி
மிஞ்சுதலாய் க்ஷேத்திரனை மிகவுறுப்பே னென்றுசொல்லி
பாரா யுதத்துடனே படைபொரவே வேணுமென்று
வாரமுட னம்படையை வகைவகையாய்க் கூட்டுமென்றார்
சொல்லாற் பெரியதொரு தோற்றமுள்ள மாமுனியே

வில்லாளும் பாண்டவர்கள் மிகவும் நமக்கெதிர்காண்
தம்முடைய பாலகனைத் தான்துணிந்து கொல்லவென்றால்
பொன்மைசெறி பாலகற்குப் புகமுண்டோ மாயவரே
தேவரீர் பஞ்சவரைச் செயிக்கவென்று தான்றுணிந்தால்
காவலா யைவரையும் காக்கவல்லா ருண்டோதான்
நாரதனார் சொல்லியபின் நாரா யணருரைப்பார்
தீரமுள்ள க்ஷேத்திரனைச் செயித்துவா என்றுரைத்தார்
செயித்து வராதிருந்தால் சென்னியற வெட்டிடுவேன்
மாற்று வகைசொல்ல வகையில்லைகாண் மாமுனியே
மாமுனியே நீர்கேளீர் மகாதேவர் தம்மாணை
நாமவரைக் கொல்லுவது நம்மாணை நிச்சயங்காண்
வைப்பறவே சொல்லியபின் மாமுனியுந் தானெழுந்து
செப்பமுள்ள பஞ்சவரைத் தேடியே சொல்லலுற்றார்
குருக்ஷேத் திரன்றானும் கோலமுள்ள பஞ்சவரை
இருக்கு மிடந்தேடி யிமைப்பளவிற் சென்றுபுக்கார்
ஓடி யெழுந்திருந்து உற்றதொரு பஞ்சவர்கள்
நாடியே மாமுனியை நமஸ்கரித்தா ரம்மானை
ஆசனத்தின் யேவிருத்தி ஆசாரம் பண்ணிநின்றார்
பாசமிகக் கொண்டதொரு பாவிகுரு க்ஷேத்திரனை
ஆசனத்தின் மேற்றயிலும் அச்சுதற்குச் செய்தகுற்றம்
நேசமுள்ள தர்மருக்கு நீதியுடன் சொல்லலுற்றார்
ஓசையுள்ள மாயவனா ருங்கள்மேற் கோபமதாய்ச்
சொன்னது சொல்லத் தொலையாது காணுமக்கு
நன்னெறிசேர் ஈசுரரும் நான்முகனுங் காவாத
கன்னவில்தோள் தர்மரேநீர் காக்கும்வகை சொல்லுமென்றார்
செய்யதர்மர் சொல்வார் சிறப்புடைய மாமுனியே
வெய்ய அருச்சுனன்தான் வேட்டைபோய்க் கானகத்தில்
மீள வருகையிலே விரகாக க்ஷேத்திரன்றான்
தாளிணையைப் பூண்டுகொண்டு தன்னையவன் காத்திடென்றான்
குற்றமது கேளாமல் கோதை யருச்சுனனும்
சத்திய வார்த்தையவன் தப்பாமற் றானுரைத்தான்
வந்தகுற்றம் ஏதென்று வகைவகையாய்க் கேட்டதற்பின்
கொந்துலவுந் தாரான் குருக்ஷேத் திரனுரைக்க
மெத்தமனத் தாபமாய் வேண்டும் துயரமுற்று
அடைக்கலமாய் வந்தவனை அண்டாமல் தானுரைத்தால்
சடைக்கங்கைத் தாரான் தன்மனத்துக் கேற்காதே
தெண்டிரைசூழ் வையகத்தில் செப்புவரோ நம்புகழை
புண்டரிகக் கண்ணன் பொறுப்ப தவர்பொறுமை
குறியாகத் தானுமொரு குற்றமது செய்யவில்லை
என்று முனிசொல்ல ஏற்றமுள்ள தர்மர்சொல்வார்

அறியாமல் வந்தகுற்றம் ஆனதொரு மாயவனார்
குற்றமதா யெண்ணியவர் கோபமதாய்த் தான்மொழிந்தால்
மற்றொருவர் காக்க வகையேதுங் கூடாது
இத்தையவர் பாராட்டி எங்களையுங் கொல்லுவராம்
சீற்றமின்றி நாமுஞ் சிவலோகஞ் சேருவமே
பூவுலகில் மானுடர்க்கும் போற்றரிய தேவருக்கும்
மேவுதலாய்ப் பேச்சுமுண்டோ மெய்ஞ்ஞான மாமுனியே
என்று தர்மர்சொல்ல ஏற்றமுள்ள மாமுனியும்
கன்றியவர் தர்மர்தமைக் கடுவசனஞ் சொல்லலுற்றார்
மன்றில் பிழைகாக்க வகைசொல்லக் கேளாய்நீ
என்றும் குருவுக்கு இரண்டு நினைப்போரும்
மாதா பிதாவுக்கு வஞ்சனைகள் செய்தோரும்
சூதான ஈஸ்வரர்க்குத் தோஷமது செய்தோரும்
கோவதையைக் கொன்றதொரு குருலிங்க சங்கமத்தைப்
பாவனைகள் செய்துவந்து பண்புடைய தர்மாநீ
நீதமுடன் காப்பர்களோ நினைவில்லையோ தான்கெடுவீர்
தீதவனை வைத்திருந்தால் செயித்துவா என்றுரைத்தான்
செற்று வராதிருந்தால் சென்னியற வெட்டிடுவேன்
மாற்று வகைக்கு வகையேது மன்னவனே
ஒன்று மறியாமல் உரைத்தாயே மாமுனியே
வல்வினைதான் செய்தாலும் மனதாரச் செய்யவில்லை
தஞ்சமென்று வந்தவனைத் தான்செயிக்க வேணுமென்றால்
ஆறுகொண்ட செஞ்சடையார் அரனார்க்கு மேற்காதே
பேர்தானு முண்டோ பேர்பெரிய மாமுனியே
மாயவனை ரிக்கருமம் மண்டலத்தோர் மெச்சிடவே
போயவரை என்னவென்று பொறுத்தாற் புகழ்பெரிது
சங்கையுள்ள நாரதரும் தானெழுந்து கோபமுடன்
உங்கள் தமக்காக ஓடிவந்தோம் பஞ்சவரே
கோலமுள்ள மாயவனார் கோபமது பார்க்கவென்றால்
ஆலமுண்ட கண்டர் அரனாலுந் தீராது
உங்கள் சமர்த்தும் உலகளந்தான் றன்சமர்த்தும்
திங்கள் முகத்தோனே தீர்க்கமாய்ப் பார்த்திருப்போம்
ஆனதொரு நாரதரும் ஐவருக்குத் தானுரைத்துக்
கானகத்தை விட்டன்று கண்ணர்பாற் செல்லலுற்றார்
அயோத்தி நகராளும் ஆயனடிதொழுது
சயோத்தியாய்ச் சொன்னதுவும் தாமவனைப் பேசினதும்
கன்றியவர் சொன்னதுவும் கட்டுரைத்தார் மாமுனியும்
நன்றியுள்ள மாயவரே நல்லதொரு பஞ்சவர்க்காய்ப்
புண்டரிகத் தோனே பொறுப்பதுவே தன்பெருமை
ஆண்ட குருவே யடியே னுரைத்தமொழி

நன்மையோ தீமையோ நாயே னுரைத்தமொழி
என்ன மனத்திலெண்ணி யேற்குந் திருவுளத்தில்
மண்ணையுண்ட மாலே மனதுக்கு எற்றபடி
மாயன்வெகு கோபமுடன் மாமுனியைத் தான்பார்த்துத்
துய்யதொரு தேவரல்ல தோற்றமுள்ள ஈசனல்ல
கால யமனல்ல கருது பிரமனல்ல
இந்திரனு மல்ல இரவிமதி தானுமல்ல
வச்சிரத்தோ னல்ல மால்பிரமன் தானுமல்ல
சீலப் பெரும்பிழைதான் செய்தகுரு க்ஷேத்திரனை
ஆன சமர்த்தறியான் அர்ச்சுனனே காக்கிறவன்
கானகத்தில் நாமவரைக் கன்றிவிழக் கொன்றுழக்கி
சீலப் பெரும்படையும் தேர்புரவி காலாளும்
கோல மதக்களிறும் கோப்புடனே கூட்டுமென்றார்
அந்நேரந் தூதர் அங்கங்கே தானோடி
படைமனுஷ ருள்ளோரும பட்டணத்தி லுள்ளோரும்
அடைவுடனே வந்துநின்று ஆய ரடிதொழுதார்
தம்பட்ட மேளம் தாரையுடன் பேரிகையும்
துன்பப் படுலோகந் துணுக்கெனவே தானதிர
செம்பவள வாயாள் சுபத்திரையாள் தான்கேட்டு
வெம்பி யெழுந்திருந்து மிகவலறி மாயவர்முன்
ஆயரே யச்சுதரே அண்ணாவே பஞ்சவர்மேல்
மாயவரே எங்களுக்கு வாய்த்ததுணை யென்றிருந்தோம்
தூரியோ தனன்பார்க்கில் தேவரீர் பஞ்சவர்மேல்
சரியாக அண்ணாவே தான்படையும் போவர்களோ
வரிக்கோல வில்லெடுத்து மாயவரே போவர்களோ
எந்தன் அர்ச்சுனனார் எத்துஞ் சிலையுடையார்
தந்தைக்கு வந்ததுயர் தான்தீர்க்கும் வல்விசயன்
சந்தமுள்ள வில்லாலே சதாசிவனைத் தானடித்தான்
இந்த வுயிர்கொல்ல இணங்குதோ உன்மனந்தான்
கந்தமுள்ள மாலே கடலை யடைத்தோனே
எந்த னுயிர்கொல்ல எற்குதோ உன்மனந்தான்
சுந்தரப்பொன் சுபத்திரையாள் சோர்ந்துமுகம் வேறுபட்டாள்
சங்கையுள்ள மாயவரும் தங்கைமுகம் பார்த்துரைப்பார்
துங்கமுள்ள க்ஷேத்திரனைச் சோர்வுசெய்து போனவனை
மண்டலத்திற் றேவரெல்லாம் வைத்திருக்க மாட்டாமல்
திண்டுமுண்டாய் அர்ச்சுனன்றான் தீவினைகள் வைப்பதுவோ
நந்தமக்கு வேண்டாதான் நங்கையே யங்குவந்தால்
அங்கவனை வைத்திருந்து ஆக்கிரமஞ் சொல்வதுதான்
திங்க ணுதலாளே தேன்மொழியே யார்பொறுப்பார்

அங்கவனை நாம்தாம் அறிந்துவிட வேணுமென்ருர்
என்றுசொல்ல மாயவனுர் ஏங்கி யிளங்கொடியும்
சென்றுதான் பஞ்சவர்கள் சேதியைக்கண் டேவருவோம்
தண்மையுள்ள அண்ணனது தாளிணையைப் பூண்டுகொண்டாள்
திண்ணமுள்ள பஞ்சவர்பால் சென்று வருமளவும்
நின்று விடுமென்று நெடியோன் றனையமர்த்தி
கண்ணருவி நீர்சொரியக் கானகத்தே செல்வாளாம்
மண்டலத்தோர் மெச்சும் மகிமையுள்ள பஞ்சவரைக்
கண்டவள்தான் தெண்டனிட்டுக் காரிகையு மேதுரைப்பாள்
கங்குல்நிறத் திருமாலும் கடுங்கோபங் கொண்டெழுந்தார்
திங்கள் முகத்தோனே திருமால் நமைச்செயிக்க
அடர்ந்த படைகூட்டும் ஆதரவை நான்கேட்டுக்
கொர்ச்சித்துக் கூட்டமிடுங் கெம்பீர நான்சேட்டு
அந்த மொழிகேட்டு அண்ணனது பக்கம்போய்
எந்தைபெரி தெங்களைநீர் ஜெயிக்கவென்று வந்தீரோ
எந்தனுயிர் கொல்ல ஏற்குதோ வென்றுரைத்தேன்
கூறுகின்ற என்னையவர் கோபமுடன் ருன்பார்த்து
நம்மை யடுத்திருந்தும் நாமவரை யேற்றிருந்தும்
தீமைசெய்து போனவனைத் தீர்க்கமாய்க் காக்கவென்று
ஒப்புடைய பஞ்சவர்கள் உறுதியுடன் காப்பரென்று
செப்பமுட னேயவர்கள் சேனைபடை யுள்ளவெல்லாம்
சன்றியவர் வந்தவனைக் கைபோட்டுத் தாங்கொடுத்தார்
தோகை மயிலழகி சுபத்திரையே நீ கேளாய்
ஒப்புக் கொடுப்பர்களோ உபாயம் நினைப்பர்களோ
வைப்புடைய மண்ணுலகில் வாழ்பவர்க்கு மேற்காதே
செல்வத்தை யெண்ணிச் சிலகாலம் நாமிருந்தால்
பாக்கியத்தை யெண்ணிப் பலகாலம் நாமிருந்தால்
ஆலால முண்ட அரனுர்க்கு மேற்காதே
மண்ணுலகம் விண்ணுலகம் வாழ்பவர்க்கு மேற்காதே
கண்ணன் தன்கையிற் கணையாலே ஐவரையும்
கொன்றதினு லென்னகுறை கூறுவாய் மாமயிலே
என்று தர்மர்சொல்ல ஏங்கி இளங்கொடியும்
திண்மையுள்ள பஞ்சவரைச் செப்பமுடனே தொழுது
மண்ணையுண்ட மாயவர்பால் மாமயிலாள் தாளடைந்தாள்
ஆய ரடிதொழுது ஆரணங்கு மேதுரைப்பாள்
கல்லைப்பெண் ணுக்குவித்த கண்ணர்பா லேதுரைப்பாள்
அல்லற் பிறவி யறுக்குமந்த மன்னவர்முன்
உம்முண்டைய சேதியெல்லா முரைத்தே னவர்தமக்கு
வெம்மையுடன் பஞ்சவர்கள் வேண்டும் விசாரமிட்டுப்
போதத் தவிப்பாய்ப் புலம்பியவ ளேடியங்கே

மாதர்க் கரிதான மன்ன னருச்சுனன்பால்
சென்று விழுந்ததற்குச் சிவன்பேரி லாணையிட்டுக்
குன்று புகழ்ந்தொரு குற்றமது கேளாமல்
வார்த்தை யுரைத்தார்காண் வலுவுடைய பஞ்சவர்கள்
போற்றி யுரைத்தவளும் பொறுமையுள்ள அண்ணனே
மாற்றிவிடு மிக்கருமம் மாமயிலா ளீதுரைக்க
எற்றுஞ் சிலைக்கையர் ராமருமங் கேதுரைப்பார்
இந்தக் கெறுவம் இனித்தெரியும் என்தங்காய்
அந்தக் கெறுவம் அறிந்து விடுவமினி
சிந்தை கலங்காமல் தேன்மொழியே மாளிகைபோ

## பாண்டவர்களும் கிருஷ்ணரும் யுத்தஞ்செய்தல்.

கந்தமலர்க் கண்ணர் கடுங்கோபங் கொண்டேதான்
அன்றுவட வாக்கினிபோல் ஆவித் தெழுந்திருந்து
மான அயோத்திநகர் மண்டலத்தி லுள்ளோரும்
ஆனை குதிரைகளும் ஐம்பதுலட் சந்தேரும்
சேனை படைத்தலைவர் செய்யதொரு காலாளும்
எண்ணவொண்ணாச் சேனை எண்பதுலட் சங்குதிரை
கண்ணர் வரவழைத்துக் காரிடிபோ லேமுழங்கி
மன்னர் படைத்தலைவர் மகாசேனை யத்தனையும்
பன்னு தமக்குரிய பலவா யுதமெடுத்தார்
பட்டு வசையும் பலவா யுதமெடுத்தார்
இட்ட முடனே யிதமான பச்சைவடம்
கச்சையுடன் சீராவும் கட்டாரி முதலான
பச்சை நிறத்தான பலவா யுதமெடுத்தார்
எற்றினர் வில்லும் இராமபாண மெடுத்தார்
காற்றிரைச்சல் போல கடுங்கணையுந் தானெடுத்தார்
கோட்டுக் கணையும் கொடுங்கணையும் தானெடுத்தார்
தீட்டியதோர் சக்கரமும் தெரிந்துகணை தானெடுத்தார்
தோள்புரள அம்பும் சுடுகணையுந் தானெடுத்தார்
கால முகில்போலே கருமேக வில்லெடுத்தார்
வயிரக் கணையும் மகாமேக வெண்கணையும்
அயிரா வதக்கணையும் அமரர்கோன் றன்கணையும்
எட்டுவா யம்பும எரிவருணன் றனகணையும்
மட்டே ரகக்கணையும் மானேவென் றன்கணையும்
தீட்டியதோர் நற்கணையும் தெரிந்துகையிற் றானெடுத்தார்
நூறா யிரங்கோடி நுனிவயிர வெண்குடையும்
ஆறா யிரங்கரியும் ஐம்பதுலட் சந்தேரும்
இருநூறு வெள்ளம் இராமதளத் தார்படையும்
பேரிகை யெக்காளம் பெரியதொரு டம்மாரம்

வாரியதிர மகாமேரு தானதிரப்
பார முடிசேடன் பதியுங் கிடுகிடெனத்
சென்றார் பெருமாள் திடுக்கிடவே லோகமெங்கும்
அன்று துரியோதனனும் அந்தவிசேஷங்கேட்டு
பதினெட்டக் குரோணி படைமனுஷர் தம்முடனே
அதிபிரியமாக அவனு மனமகிழ்ந்து
பச்சைவண்ணன் றன்றுணையாய்ப் பஞ்சவர்கள் தாமிருந்தார்
இச்சையுடன் வந்தவினை யான்செய்த புண்ணியங்காண்
என்று புறப்பட்டார் ஏற்றமுள்ள தம்படையும்
குன்றுதவில் பஞ்சவரைக் கோப்புடனே வந்தடைந்து
நாம்வந்த காரியந்தான் நம்மாலே வந்ததென்றால்
ஒருவர்க்கொருவர் உதவிநலஞ் செய்யாமல்
செருவில்வினை வந்ததென்றால் செல்லா திருப்பர்களோ
படைக்குத் துணையாக வந்தோம்நாம் பஞ்சவரே
நடைக்கும் பெரியதொரு நாராயணன் பகைத்தால்
விடைக்கும் மனுஷர்களோ வெல்வமென்று சொல்வதுவோ
சடைக்கங்கை தானணிந்தார் தானவனார் தாமொழிய
ஓரடியா விந்த உலகளந்த மாயவரைப்
பாராசை யாலே படைபொரவே மாட்டுவரோ
எங்கள்மேல் வந்தாலும் யாங்களெல்லாம் மாண்டாலும்
செங்கண்மால் சீர்பாதம் சேருவமே அண்ணாவே
என்றுரைக்கப் பஞ்சவர்கள் எத்துதுரியோதனனும்
நின்றுரைக்கு மவ்வளவில் நெடியோன் படைகளெல்லாம்
ஆலித்துக் கொக்கரித்து ஆயன்படை மூடியதே
அப்போது பெரும்படையும் ஐவர்படை யேதென்ன
மாயன் விளம்ப வலுகோபங் கொண்டேதான்
தாயகமாய் வந்தவனைத் தான்பார்த்து மாயவரும்
இன்று தெரியுமடா எல்லாம்துரியோதனனே
நின்று படைமேலே நெடியோன் படையுளவும்
சென்று மிதித்தார் துரியோதனன் படைமேல்
அன்றுதுரியோதனனும் அறவே துயரமுற்று
மெத்த மயங்கி வெடுவெடெனத் தான்மயங்கி
கொத்துக் குலைந்து தேரேறிப் போகலுற்றான்
இன்றுபிழைத்தோமென்று எல்லோருந் தானேங்கி
மூன்றுகுதிரைத்தேரான் முரிந்தோடிப் போகலுற்றான்
கானகமும் வானகமும் கண்ணும் பொறிபறக்க
ஆனதொரு மாயவரும் ஐவர்மேற் செல்லலுற்றார்
கண்டவுடன் பஞ்சவர்கள் கண்ணர் பெரும்படையைப்
புண்டரீகக் கண்ணர் பொன்னடியை நான்மறவேன்
ஆயுதங்கள் தாமெடுத்து அர்ச்சுனனு மந்நேரம்

தாயே சரஸ்வதியே சங்கரியே தஞ்சமென்று
குண்டலங்கள் தானணிந்து கோலவரி வில்லெடுத்து
தெண்டாயு தம்வீமன் செங்கையிலே வில்லெடுத்து
வண்ணப் பரிநகுலன் வாளெடுத்து வில்லெடுத்து
சங்கைச் சகாதேவன் சரமாரி தானெடுத்து
சொன்னவண்ணஞ் செய்த சுருதி தனைநினைந்து
பங்கமுள்ள சோதி பகவான் றனைநினைந்து
வன்மையுள்ள தர்மர் மகாமேக வில்லெடுத்து
செம்மை யுடனே சிவனார் துணையெனவே
கவச முறப்போட்டுக் கார்வண்ணன் தேரேறி
சிவபூசை யெல்லாம் செய்து மிகமுடித்து
நன்றியுள்ள பார்த்தன் நாகபா சக்கணையும்
பன்றிவே டம்மெடுத்துப் பரமர் தந்த பாசுபதம்
அயிரா வதக்கணையும் அமரர்கோன் றன்கணையும்
பயிலுநற் றேரேறிப் பார்த்தன் கவசமிட்டான்
நின்றார்கள் பஞ்சவர்கள் நெடுமால் தமக்கெதிரே
அஞ்சு ரதமும் அஞ்சு மலைபோல
சுத்த கிரியைந்தும் சுழன்று வருவதுபோல்
மத்த கசமைந்தும் மதம்பொழிந்து நின்றாற்போல்
பஞ்சவர்கள் நின்ற பளபளப்பை யென்னசொல்வேன்
ஆகாச வீதியிலே அந்தரத்தே தேவர்கணம்
ஆதி சிவனாரும் அமரர்களைத் தான்பார்த்து
ஆயன் தளந்தனையும் அழகுதர்மர் ஐவரையும்
தாயகமாய் நின்ற தைரியத்தைப் பாருமென்றார்
பெருமாளின் றன்கிருபை பின்பறியப் போகிறோமே
இந்தத் தளமுழக்கம் இனியறிவோ மென்றுரைத்தார்
தனஞ்சயன் றன் கையாலே தாமோ தரன்றானும்
படுந்துயரம் எல்லாம் பார்ப்போ மினியென்றார்
வண்டுறையும் பூந்துளப மாலையணி மாயவனார்
சென்றுநின்றே நாலு திசைகளெங்கும் தான்பார்த்து
வந்து வளைந்தார் மகாமேரு தானடுங்க
செந்தூள் பறக்கச் செங்கதிரோன் றான்மறைய
வந்தார் வடதிசையில் வன்மையுள்ள சேனையுடன்
தென்றிசையி லாடகத்தான் சென்று வளைந்தனராம்
கீழ்த்திசையில் வந்தார் கிருஷ்ணரெனு மாயவனார்
மேற்றிசையில் வந்தார் விடையான மாயவரும்
நாலு வகையாலும் நாரா யணர்பவிசு
எண்ணவொண்ணாச் சேனை எண்பதுலட் சம்மணிதார்
மண்ணும்விண்ணும் தானதிர வந்து வளைந்துகொண்டார்
திரௌபதையாள் தன்னிடத்தில் குருக்ஷேத் திரனைவைத்

பத்திரமாய் வைத்திரென்று பார்த்தனவன் முன்கொடுத்து
கேட்பாய் திரௌபதையே கேட்டியென்று தானுரைத்து
மாட்டிடையன் பொல்லா மடிப்புகளைச் செய்வனென்றும்
காட்டிக் கொடுத்துக் கணைகள் மிகவெடுத்து
யாடேறு மீஸ்வரரே மகாதேவர் தஞ்சமென்றார்
கந்தன் றனையீன்ற காளகண்டா தஞ்சமென்று
எந்தன் றனைப்படைத்த ஈசர்பதந் தஞ்சமென்று
வந்து வளைந்துகொண்டான் மாயன் படைநடுங்க
இந்தக் கிருபையெல்லா மினித்தெரியு மாயவரே
சொந்த மிவனலவோ சொற்பமென்றே யெண்ணிவிட்டீர்
எண்ணின எண்ணமெல்லாம் ஏழைமதி யாருமென்றார்
சிந்துரத்தே ரேறிச் செங்கையிலே வில்லெடுத்தார்
அந்தமுள்ள தர்மர் அதட்டி ரதம்விடுத்தார்
தர்மர் நடக்கத் தனஞ்சயனு மேதுசொல்வான்
வர்மந் தொடுத்ததொரு மாயவனார் தம்படைமேல்
அண்ணாவே நீர்தான் அரியதொரு தேரேறி
கண்ணார்மேற் சொல்லக் காரணமோ என்றுரைத்தான்
தம்பியைப்பார்த் தேதுரைப்பார் தர்மர் மனமகிழ்ந்து
வம்புறையுந் தாரானே வல்வினைகள் வந்ததென்றால்
பெருமை சிறுமையென்று பேருலகி லுண்டேதான்
தாருமென்று சொன்னாலும் சாகா திருப்பர்களோ
புத்தியல்ல தம்பியரே போர்பெரிய அர்ச்சுனரே
சித்தமுடன் வாருமென்று செய்ய படைமேலே
சென்றார்கள் பஞ்சவர்கள் திருமால் படைமேலே
வந்து வளைந்தார்கள் மாயன் பெரும்படைதான்
பஞ்சவர்க ளவர்களைப் பார தளம்வளைக்க
வெற்றி மதயானை வீமன் றனைவளைக்க
வீமன் வெகுண்டெழுந்து வீரமுள்ள தண்டெடுத்துச்
சாடினான் கிருஷ்ணன் தன்னுடைய படைகளெல்லாம்
வாடி முகஞ்சோம்பி மண்மீதில் தானுருகத்
தலைக ளுருண்டுவிழத் தவிடு பொடியாக
அலைகள் சிதறிவிழ அமிர்தங் குடல்சரிய
மூளை சிதறிவிழ முன்கை யொடிந்துவிழ
அப்போது கிருஷ்ணன் ஆனபெருஞ் சேனையெல்லாம்
அபயம் அபயமென்று ஆயன்மேற் போய்விழுந்து
தத்தளிக்கு மவ்வளவில் தானேடி யாழ்வாரும்
வீமன்மேல் நூறுகணை விட்டா ரிலக்காக
விட்ட கணைகள்தமை விரைந்தறுத்துப் போர்வீமன்
திட்டெனவே யாழ்வார் தேர்ப்பாகன் றன்றலையை
மூட்டி யடித்தான்காண் மூளை தலைசிதற

அப்போது வீமன் ஆழ்வார் தமைமுடுக்கி
மெய்ப்பான கெர்ச்சனைகள் வீரமுடன் செய்குவனும்
ஆழ்வா ரலைகுலைந்து அரண்டுமெறு வில்லெடுத்து
தாழ்வாக நூறுகணை தாக்கினார் வீமன்மேல்
அம்புபட்டு வீமன் அலைகடல்போ லேகுமுறி
கும்பந்த ஞனதொரு கும்பன் றன் கிருஷ்ணனையும்
சம்பந்த ஞனதொரு சங்கனையும் தான்வதைத்தான்
மண்டி யடித்தான்காண் மதகிரியோ போர்வீமன்
சண்டப்பிர சண்டனெனச் சதைசதையா யற்றுவிழ
மன்னர்படை யத்தனையும் மண்ணடங்க விண்ணடங்க
கண்ணர்படை யாள்வார் கதறிவிழத் தானடித்தார்
ஆயாது சேனை அபயமிட்டு ஓடியதே
காயாம்பூ வண்ணர்படை கலங்கி யபயமிட்டார்
அப்போது தர்மர் ஆயர்தமைப் பார்த்துரைப்பார்
மைப்போது மேனியனே வல்வினையே னுன்கரத்தால்
எங்க ளுயிரிறந்தா லீடேற்ற முண்டெனவே
திங்கள் முகமுடைய திருமால் முகநோக்கி
வரிவில் தனையெடுத்து மாயவனார் பாதமதில்
பரிவுடனே தெண்டனிட்டுப் பத்துக் கணைதொடுத்தார்
அப்போ தருச்சுனனு மைந்துகணை தொடுத்தார்
விட்ட கணைகளெல்லாம் வெண்மலராய்ப் போயினவே
திட்டெனவே மாயவர்தஞ் சீர்பாதம் போய்விழவே
சென்று விழுந்தகணை சேவடியைப் பூண்டுகொள்ள
மெத்த மனமகிழ்ந்து மேலான மாயவரும்
பத்தியுடன் கணையைப் பரிவாக விட்டதென்ன
குற்றமது நான்பொறுக்கக் குருக்ஷேத் திரன் றனையும்
உத்தரங்கள் சொல்லாம லொப்புக் கொடுப்பர்களோ
என்றுசொல்ல மாயவனார் இன்பமுள்ள பஞ்சவர்கள்
நன்றுநன்று மாயவரே நாங்க ளிறந்தாலும்
ஒப்புக் கொடுப்பதில்லை உபாய நினைப்பதில்லை
என்றவர்கள் சொல்ல எரியெழவே கோபமுற்று
நன்றுநன்று உங்கள்வலு நாமறிய வேண்டுமென்று
கொன்று விடேனுகில் கோவிந்தன் நானலகாண்
என்று சபதமிட்டு இருவிழியுந் தான்சிவக்க
ஆல மெழுந்தாற்போல் அண்டமெல்லாந் தானடுங்க
சால வரையும் சரமுங் கிடுகிடென்ன
அட்ட கிரிக ளனைத்துங் கிடுகிடென்ன
தொட்டா ரிராமசரந் தொல்வேந்தர் தம்மேலே
விட்டகணை தன்னை விரைந்தெடுத்துப் பஞ்சவர்கள்
திட்டெனவே தாங்கள் சென்னிபின்மேல் வைத்தாராம்

வரிவில் தனைவளைத்து மாயவனார் பாதமதில்
பரிவுடனே தெண்டனிட்டுப் பத்துக் கணைதொடுத்தார்
அப்போ தர்ச்சுனரும் அஞ்சு கணைதொடுத்தார்
சேனை பலகோடி தேர்களொரு முக்கோடி
ஆனை யெழுநூறு அறுபதுலட் சம்புரவி
பஞ்சவரை வந்து வளைந்துகொள்ளப் படைகளெல்லாம்
திக்குத் திசைநடுங்கச் செங்கதிரோன் தான்மறைய
எண்ணெய்க் குடத்தை யெறும்புவந்து சூழ்ந்தாற்போல்
தண்ணீர்க் குடந்தைத் தவளைவந்து சூழ்ந்தாற்போல்
கார்மேகஞ் சூழ்ந்து கதிரை மறைத்தாற்போல்
அஞ்சாத மன்னவரை அநேக தளம்வளைந்தார்
மஞ்சாரும் பூங்குழலாள் மகாலட் சுமிமுதலாய்
அண்டர் முதலாக ஐயோ எனஏங்க
கண்ட முனிவரெல்லாம் கண்ணீர் மிகச்சொரிய
தேவாதி தேவர்கள் திடுக்கிட் டவரேங்க
பூவேந்தர் செய்யும் பிழைகேட்டைப் பாருமென்று
மையேர் மருண்டகுழல் மாதர் மனஞ்சலிக்க
வெள்ளிமலை யீசுரனார் மிகவெகுண்டு பார்த்திருக்கத்
தெள்ளியோ ரைவரது திறமைகள்கண் டேமகிழ்ந்து
இந்த அநியாயம் எவ்வுலகுங் கண்டதில்லை
மண்ணுளத் தக்கதல்ல மாடுமேனைக் காகவல்ல
வீம்புக்குத் தாங்கள் வினைபொரவோ சேவகரே
ஆண்பிள்ளை காணவர் ஆண்மையுள்ள பஞ்சவர்கள்
சொல்லுக் கிறக்கத் துணிந்தவர்க ளுண்டோதான்
பரம சிவன்தானும் பஞ்சவரை மெச்சுகின்றார்
அரன்றான் மனமகிழ்ந்து ஐவரையும் மெச்சினர்காண்
என்றுசொல்லி மெச்சி யிமையோர் களிப்படைந்து
அன்று சிவனாரும் அல்லோர் மகிழ்ந்திடவே
வந்த படைமேலே மதயானை போற்சீறி
அந்தரமுந் தானடுங்க அடாவீமன் றானெழுந்து
தெண்டா யுதத்தாலே செவிபடத் தானடித்தான்
முண்டமாய் வீழ்வாரும் முன்கையற்று வீழ்வாரும்
துண்டந் துணுக்காகத் துணிபட்டு வீழ்வாரும்
ஐயோ யெனவே அலறி விழுவாரும்
மையேரு மேனி மணவாள மாயவரே
சொல்லாற் புகழ்வீமன் றோற்றமுட னேயடித்தான்
கல்லான தேர்களெல்லாம் கட்டுடைந்து போகுதையோ
அபயம் அபயமென்று ஆயர்மேற் போய்விழுந்தார்
ஆயன் சினந்தெழுந்து ஆனதொரு வில்லெடுத்து
விட்டா ரிலக்காக வீமன் உடல்மேலே

அமபுபட்டு வீமன் அலைகடல்போ லேகுமுறி
வெய்பி யெழுந்திருந்து விண்ணுலகந் தானடுங்க
இருப்புத்தண் டாயுதத்தை யிதமாகத் தானெடுத்து
பொருப்புக் கரிகள்விழப் போர்வேந்தர் பட்டுவிழ
மாக்கள் பலவீழ மன்னவர்கள் பட்டுவிழ
தேர்க ளொடிந்துவிழத் தேர்க்கொடிக ளற்றுவிழ
அடித்தான் மதவீமன் ஆயன் பவுசையெல்லாம்
மடிந்த மனுஷர்களும் மாக்கள் பலவீழ
எண்ணவொண்ணாச் சேனை யிறந்து படும்போது
அப்போது தர்மர் அஞ்சு கணைதொடுத்தார்
வில்லி யர்ச்சுனனும் மிகவெகுண்டு மாயவர்மேல்
ஓரம்பு தான்தொடுக்க ஒருகோடி யம்பாச்சு
தொட்டா னருச்சுனனும் துளசிமணி பூண்டவர்மேல்
தொட்ட கணையெல்லாந் துணித்தறுத்து மாயவரும்
மாயன் சினந்து மகாமேக வில்லெடுத்து
சென்றுருவ வாளிதொட்டார் சிறியவர்கள் பஞ்சவர்மேல்
கன்றி யெழுந்திருந்து கண்ணரது வெம்படைமேல்
ஓடி யடித்தான்காண் உறுதியுள்ள போர்வீமன்
மாயவனார் தன்னுடனே வந்தபடை மன்னவரும்
நாடியவர் பஞ்சவரை நாலுதிக்குந் தான்வளைந்தார்
வாடிய மானதுவும் வலையிலகப் பட்டாற்போல்
ஓடி வளைவாரும் ஒருமித்து நிற்பாரும்
அம்பு தொடுப்பாரும் அவரவரே வாளெடுத்து
வெம்பி யவர்மேலே வெண்பூசல் செய்வாரும்
இப்படித்தான் வந்தபடை எண்பதுகா தமகலம்
செப்பமுடன் பஞ்சவர்கள் சீறி யெழுந்திருந்து
ஓடி யடித்தார்காண் உபயதள மத்தனையும்
சாடினான் வீமன் தவிடு பொடியாகச்
செங்கண்மால் தன்னுடைய தேர்ப்பாகன் பட்டுவிழ
திங்கள் முகமாயன் தேர்க ளொடிந்துவிழ
ஆனை குதிரையெல்லாம் அபயமிட்டுத் தானோட
சேனை மன்னரெல்லாம் சீறி யபயமிட
தெண்டா யுதத்தாலே சேனைமன்னர் தாமடிய
வண்டுழலு மார்பன் மாயன் படைமடிய
அண்டர் முனிவரெல்லாம் அதிசயித்துப் பார்த்திருந்து
கொண்டாடி விண்ணவர்கள் கோப்புடைய பஞ்சவர்கள்
இன்று இறந்தாலும் இவர்களுக்கு மோட்சமுண்டு
நன்றுநன்று பஞ்சவர்கள் நம்பாதமே யடைவார்
என்றுரைக்கு மவ்வளவில் எத்துஞ் சிலையமர
வந்த படிமடிய மன்னவருந் தாமடிய

170469

வெந்துமனம் புண்ணாகி மிகவழன்று மாயவரும்
சந்தேகங்க ளெண்ணாமல் சண்டைசெய்தார் பஞ்சவர்கள்
வன்போர் செய்தார் மனமகிழ்ந்து பஞ்சவர்கள்
இந்தத் திராணியினால் எனக்கெதிரி யானார்கள்
நந்தமது வெம்படையை நசுக்கிக் குவித்தனர்காண்
என்று நெடுமால் ஏற்றபெரு மூச்செறிந்து
கன்று மனதுகன்னிக் கடுங்கோபங் கொண்டெழுந்து
நெஞ்சி லடக்கி நெடியோன் கணைதொடுத்தான்
பஞ்சவர்கள் மேலே பலசரங்க ளேவிவிட்டார்
வீமன் விசயன் மிகுத்த சகாதேவன்
காம னழகுடைய கட்டழகன் வாள்விசயன்
வாசமிகு தர்மர் வண்ணப் பரிநகுலன்
பூசல்செய்து மாயவர்மேல் போர்வாளி தான்தொடுத்தார்
நேசமுள்ள தர்மர் நெடுமால் தனைமுடுக்கி
ஓரம்பை விட்டு உயர்ந்த கொடியறுத்தார்
ஈரம்பை விட்டு இரதத்தைத் தானறுத்தார்
மூன்றம்பை விட்டு முனைந்தடித்தார் சாரதியை
நாலம்பை விட்டு நசுக்கிவிட்டார் ஊர்பரியை
அஞ்சம்பை விட்டு ஆர்ப்பரித்தார் தர்மருந்தான்
வண்ணமுள்ள மாயன் மறுதேர் குதித்தேறித்
திண்ணமுள்ள தர்மர் திறமைசெய்தார் தப்பினங்காண்
கோலவரி வில்லெடுத்துக் கொடியதொரு நாண்பூட்ட
சாலகுண முள்ளதன்மர் தன்கணைக ளேவிவிட்டார்
விட்ட கணைகளெல்லாம் மிகத்துணித்து மாயவரும்
எட்டுவா யம்பாலே எய்தனர்காண் மாயவரும்
மட்டிறையுந் தர்மரது மார்புருவத் தைத்ததுவே
அம்புபட்டுத் தன்மர் அரனே யெனப்புலம்பி
கும்பிட்ட கையொடித்தார் கோலவிழி மாயனென்று
சிவசிவா என்று தேரின்மேல் சாய்ந்தனர்காண்
தன்மர் மடிந்துவிழத் தார்வேந்த ரிந்திரரும்
பொன்மாரி பூமாரி பொழிந்தார்கள் தேவரெல்லாம்
அப்போ தருச்சுனனும் அந்தமுள்ள தம்பியரும்
தன்மருடல் மேற்புரண்டு சாலப் புலம்பினர்காண்
அண்ணன் மடிந்தபின்பு ஆயனெங்கே தப்புகிறார்
கண்ணர் பகைந்துயரம் கண்டு மகிழ்வமினி
வெம்பியவர் மாயவர்மேல் வெண்பூசல் செய்யலுற்றார்
வானகமு மண்ணு மற்றுமுள்ள கோடிகளும்
கானகமு மெங்கும் கனமாரி யாய்ப்பொழிய
சிங்கங்கள் கூடித் திரண்டு பொருதாற்போல்
அங்கவர்க ளைவருமாய் ஆய னொருவனுமாய்

திங்களுஞ் சூரியனுஞ் சேர்ந்துபொரு தாற்போல
மாயமதாய் மேகம் வளைந்து சொரிந்தாற்போல்
ஆயன்மே லெங்கும் அருங்குருதி யாறோடத்
தூயவர்க ளைவருமாய்ச் சூழ்ந்து பொருதார்கள்
மாயன்மே லம்புபட மகாமேக வில்லெடுத்து
நாணி தனைப்பூட்ட நாரா யணன் மேலே
ஆணிக் கதையா லடித்தான் மதகிரியை
சாரதியுந் தேருந் தவிடு பொடியாகப்
பார்த்ததை வெல்லும் பகாசூரன் தானடித்தான்
தேர்நசுங்க மாயன் சீக்கிரமே தான்குதித்து
வச்சிரத் தேரேறி வலுவுடைய வில்லெடுத்து
வில்லை வளைத்து வீரமுள்ள பாணம்விட்டார்
விட்டா ரிலக்காக வீமனுடல் தன்மேலே
பட்டான்காண் வீமன் பார்வேந்தர் கொண்டாட
நகுல சகாதேவன் நல்ல அருச்சுனனும்
அதிக பெலம்படைத்த அண்ணாவே போனீரோ
கதிபெருகும் பாலகரைக் காட்டிக் கொடுத்தீரோ
சதிபெறவே தான்விழுந்து தான்புலம்பி யேயழுது
விதிவசத்தை நம்மாலே வெல்லலரி தென்றுசொல்லி
அருமையுள்ள அண்ணர்பட ஐயோநாம் இருப்பதுவோ
செருவி லெழுந்திருந்து செங்கண்மால் தன்மேலே
கோவித்துக் கொக்கரித்துக் குரவையிட்டு வாளிதொட்டார்
ஆவிக் குறுதுணையாம் அண்ணன்மார் போனபின்பு
உன்னைவிடப் போவதில்லை உலகளந்த மாயவனே
மண்ணையுண்ட மால்தனையே மண்ணையுண்ண ஏவுகிறோம்
என்று குரவையிட்டு இருவிழியுந் தாஞ்சிவக்க
நன்றியுள்ள மாயவர்மேல் நல்லதொரு பாணம்விட்டார்
ஊடறுக்க வாளிதொட்டார் ஒருகோடியம்பாக
வாட்டங் கலங்கி மனங்கலங்கி மாயவரும்
ஓடி மனமேங்கி யுதிரங்கண் ணீர்சொரிய
கோடறுக்கு மேகங் கொடுங்கணையைத் தான்தொடுத்தார்
தொட்டா னருச்சுனனுஞ் சூழ்ந்தவர்கள் தன்மேலே
அஷ்ட கிரியதிர அதிர்ந்து வருங்கணையைப்
பார்த்தன் விலக்கிவிட்டுப் பலவாளி தான்தொடுத்தான்
வெற்றி நகுலனவன் வெண்புரவி தானேறிச்
சுற்றி யவர்தளத்தைச் சூழ்ந்தறுத்து வந்தெதிர்த்து
ஆட்டிடையா நில்லுநில்லு அறிவுகெட்ட பேரிடையா
மாட்டிடையா நில்நில்உன்னை மண்மீதிலே மடிப்பேன்
என்று குரவையிட்டு எதிர்த்து முனை காட்டிச்
சாரதியைக் குத்தித் தவிடு பொடியாக்கி

வீரமுடன் தேர்தனையே விதம்விதமாய்ச் சுற்றுவராம
நகுலன் புரவியது நாலுதிக்குஞ் சூழ்ந்துவர
முன்னந்த மாக முடுகிப் புரவிவர
தேரி லிருந்தவண்ணர் திசைதெரியாமல் மயங்கி
திக்குத் திசைகள் திசைதெரியா மல்மயங்கி
கார்மேகஞ் சூழ்ந்து கண்ணை மறைத்தாற்போல்
நீர்மேக வண்ணர் நெடுமால் மனமயங்கித்
தேக்கிலையில் நீர்போலத் தியங்கினார் மாயவரும்
சற்றே நினைவுவந்து தன்மயக்கந் தான்தீர்ந்து
அஸ்த கிரிபோலே அழகுவில்லைத் தான்வளைத்து
ஏற்றம் பெரியதொரு இராமபா ணம்மெடுத்து
நாடியதோர் வெற்றி நகுலன்மே லேவிவிட்டார்
வீறடி நகுலனவன் மண்மீதி லேவிழுந்தான்
நகுலன் மடிந்துவிழ நல்ல அர்ச்சுனனும்
தம்பியுடல் மேல்விழுந்து தான்புலம்பி யருச்சுனனும
வெம்பிச் சகாதேவன் வெகுண்டெழுந்து கோபமுடன்
அண்ணா வில்விசையா அர்ச்சுனா நீகேளு
கண்ணன்மேல் நான்நடந்து கைவன்மை பார்ப்போமென் று
தேரைத் திருப்பிவிட்டான் செங்கண்மால் தன்னுடனே
சிங்கம் குமுறிச் சினந்தெழுந்து பாய்ந்தாற்போல்
வங்கமுள்ள மாயவனை வந்து வளைந்துகொண்டான்
அங்கங்கி லுள்ள அரசர் பயந்தோட.
கொண்டல்குமு றுங்குரல்போல் குமுறிக் குரவையிட
அண்டரெல்லாம் பார்த்து அதிசயித்து நின்றிடவே
ஆன சகாதேவன் ஆயனது தேர்மறித்து
கோனே யினியுனைநான் கோணங்கி யாட்டுவிப்பேன்
ஆயரே யச்சுதரே ஆட்டிடைச்சி தன்மகனே
மாயவரே யும்முடைய மாயமெல்லாம் நானறிவேன்
என்று சகாதேவன் எடுத்திரண்டு பாணமதை
வென்றியுள்ள மாயவர்மேல் விட்டான் சகாதேவன்
விட்ட கணையாயர் மேலுருவித் தேரறுத்துத்
தட்டுருவ ஆயன் தான்வெகுண்டு கோபமுற்றுப்
பாய்ந்துமறு தேரேறிப் பரிவான வில்லெடுத்து
ஆய்ந்த ஒருகணையை அக்கினிபோ லேவினரே
ஏவக் கணையதுதான் எங்குந் தணலாக்கி
தாவிச் சகாதேவன் தன்னுயிரைக் கொண்டுசெல்ல
அப்போது சகாதேவன் அண்ணாவே என்றுவிழ
இப்போ தருச்சுனனும் ஏங்கிவிழி நீர்சொரிய
ஐவருடன் பிறந்து அநாதியைப்போ லாகிவிட்டேன்
பையரவம் பூண்ட பரமனருள் அப்படியோ

தெய்வக் குறைக்கினிநாம் செய்வது என்னவென்று
பாய்ந்து தேரேறிப் பகபகெனக் கண்சிவந்து
சாந்து பீனுகணியும் தனஞ்சயனுங் கோபமுற்று
கொழுந்து மலர்வீசும் கோதை யருச்சுனரும்
எழுந்து மனம்வெகுண்டு எரியெழவே கோபமுற்றான்
முப்புரத்தைத் தானெரித்த மூர்த்தியென வேவெகுண்டு
கோப்புடைய பார்த்தன் குமாரனைப்போ லேவெகுண்டான்
வெகுண்டு அர்ச்சுனன்றான் வேகமுற்று நிற்கையிலே
வெகுண்ட அர்ச்சுனற்கு விஷ்ணுஎன்ன சொல்லுவராம்
தாயகமாய் வந்தவனைத் தான்போகச் சொல்லாமல்
உன்னாலே நால்வர் உயிரிழந்து போனார்கள்
சொன்னா லறிந்திலையே தோற்றலையே அர்ச்சுனனே
வந்தகுரு க்ஷேத்திரனை வாளாநீ காக்காமல்
தந்திரமாய் முன்னேவிட்டுத் தான்பணிந்தா யாமாகில்
வந்த பிழைபொறுத்து மன்னித்து நானும்முன்னே
உந்த னுயிர்பிழைத்து ஊர்போக ஏவுகிறோம்
கண்விழித்துப் பார்த்துக் கரியமால் தன்முகத்தை
வெண்மையுள்ள பார்த்தன் வெகுண்டே யுரைக்கலுற்றான்
ஆட்டிடையா போடா அறிவழிந்து போனாயடா
மாட்டிடைய னென்று மதியிழந்து போனவனே
அன்றாவை மேய்த்து அறிவுகெட்டுப் போனவனே
வெண்ணெய் திருடி இடைச்சிகையில் கட்டுண்டு
அணைகயிற்றி னாலே அடிபட்ட புத்தியோதான்
காய்ச்சிய பாலுக்குக் கண்ணைப் பிசைந்தழுது
பேய்ச்சி முலையுண்ட பேய்க்குணமோ பேசுகிறீர்
குட்டிக் குடுவைகளும் கோப்பாளப் பெட்டிகளும்
பட்டி யெருதுகளும் பார்க்கஇனிப் போயிடையா
சீம்பாலைக் காய்ச்சித் திரட்டியுண்ணப் போஇடையா
மண்டலத்தோர் கூப்பிடுவார் மாடுகறக்கப் போஇடையா
பாடிக் கறப்பதுநீ பார்த்திலையோ பேரிடையா
ஆடிக் கறப்பதுநீ அறிந்திலையோ பேரிடையா
கம்பளியைப் போட்டுக் கனஆயக் கோலெடுத்து
அம்பலத்தி லேபடுக்கும் அறிவுகெட்ட பேரிடையா
நீர்மோர் பால்கொண்டு நெடுந்தூரம் போயலைந்து
வாய்நோவக் கூவி வருமிடைச்சி தன்மகனே
மோருகொண்டு போகையிலே மொச்சடிக்குஞ் சிக்கடிக்கும்
மார்பைத் திறந்தலையும் மல்லிடைச்சி தங்குலமே
பட்டநா மந்தரித்துப் பருந்துளசி மாலையிட்டு
பொட்டெனவே தப்படித்துப் போயிரந்து உண்டவனே
தப்படித்துக் கொண்டு தாதா எனஆடி

ஒப்புடனே க்ஷத்ராடும் உயர்ந்தகுலத் தாரலவோ
தாதனுமோ தேரேறித் தனஞ்சயன்முன் னேயெதிர்த்துப்
போதமுடன் சண்டைசெய்யப் பொறுக்குமோ தாதாநீ
இடையனுமோ தேரேறி ஏற்றமுடன் வில்லெடுத்தால்
சடையணிந்த ஈசருக்கும் சண்முகர்க்கும் ஏற்காதே
மன்னவர்க்கு முன்னெதிரே மாட்டிடையன் தேரேறி
என்ன நினைவாலே எதிர்த்தீர்காண் கோனாரே
நால்வர் தமைச்செயித்தோம் நமக்கெதிர்தான் யாரெனவே
சாலநினை வெண்ணித் தனஞ்சயனை எய்க்கவந்தீர்
தாதன்றன் கைவலுவும் தனஞ்சயன்றன் கைவலுவும்
நீதமுடனறிந்து நெடுமாலே பாருமென்றான்
என்பிறப்பை வென்றகையை யிருபிளவாய்த் தான்பிளந்து
உன்குலத்தை யெல்லாம் ஊடறுப்பேன் பற்குனன்நான்
எங்குநீ யோடி இடையர்மனை புகுந்தாலும்
அங்கங்குந் தேடி அறுத்திடுவேன் மாயவரே
குருக்ஷேத் திரன்தனையே கோலமுடன் விட்டுவிட்டு
ஒருத்த னுயிர்பிழைத்து ஓடிப்போ என்றீரோ
நம்மோ டுடன்பிறந்தார் நால்வ ரிறந்தார்கள்
என்றனக்கு நீர்தான் இரங்கினது போதாதா
ஓடிப் பிழைக்கிறதும் உன்றனைக்கொன் றேயுழக்கி
நாடிப் புகழ்பெறுவேன் நம்பேர் தனஞ்சயன்காண்
அண்டினவர்க் காக அடியரிறந் தோமென்றால்
மன்றுதனி லுள்ளவர்க்கு வார்த்தைக் கிடமலவோ
தேவ ரிஷிகட்கும் தேவருக்கும் பேச்சலவோ
பூவுலகி லுள்ளவர்க்குப் புகழலவோ மாயவரே
என்று மனந்தன்னை வெறுத்திடவே கண்சிவந்து
நன்றியுள்ள வில்லெடுத்து நாண்பூட்டி மண்டியிட்டு
இருபுறமும் நாராசம் ஏற்ற கணைவிட்டான்
பாற்கடலிற் பள்ளிகொள்வார் பாரச் சிலைவிடுத்தார்
இரண்டுகணை யுங்கடித்து யமலோகஞ் சேர்ந்ததுவே
கார்க்கடல்கோ பித்தாற்போல் கலங்கா அர்ச்சுனரும்
அயிரா வதக்கணையை அர்ச்சுனனார் தான்விடவே
அயிரா வதக்கணையை ஆயன் தடுத்துவிட்டான்
கோட்டுக் கணைவிடுத்தான் கோபாலன் தன்மேலே
கோட்டுக் கணையைக் கோபாலன் தடுத்துவிட்டான்
மட்டே ரகக்கணையை மாயவரும் தான்விடுத்தார்
மட்டே ரகக்கணையை மன்னவரும் தான்தடுத்தார்
வாசுகிமே கக்கணையை மாயவருந் தான்விடவே
வாசுகிமே கக்கணையை மன்னவரும் தான்தடுத்தார்
எட்டுவா யம்பாலே எய்தார்காண் மாயவரும்

எட்டுவா யம்பை இந்திரன் மகன்தடுத்தான்
இந்திரபா ணமெடுத்தே எய்துவிட்டார் மாயவரும்
இந்திர பாணமதை யிந்திரமகன் தான்தடுத்தான்
எரிகணையை மாயன் எடுத்துமிக வேவிடவே
எரிகணையை வில்விசயன் எற்றமுட னேதடுத்தான்
சுடுகணையை மாயவருந் தொட்டா ரிலக்காக
சுடுகணையை வில்விசயன் தோற்றமுடனே தடுத்தான்
மூளை யுறிஞ்சியம்பை முகில்வண்ணன் தான்விடவே
மூளை யுறிஞ்சியம்பால் முகில்விசயன் தான்தடுத்தான்
உதிரங் குடிக்குமம்பை உலகளந்தான் விட்டிடவே
உதிரங் குடிக்குமம்பை உள்ளறவே தான்தடுத்தான்
விச்சுளி யஸ்திரத்தை விசயன்மே லேவிவிட்டார்
விச்சுளி யஸ்திரத்தை விசயன் தடுத்துவிட்டான்
வருணாஸ் திரந்தனையே மாயன் எடுத்துவிட்டான்
வருணாஸ் திரந்தனையே மாயன் தடுத்துவிட்டான்
வாயுவாஸ் திரந்தனையே மாயனு மேவிவிட்டார்
வாயுவாஸ் திரந்தனையே மன்னன் தடுத்துவிட்டான்
இடியாஸ் திரந்தனையே ஏவிவிட்டார் மாயவரும்
இடியாஸ் திரந்தனையே இருபிளவாய்ப் பண்ணிவிட்டான்
ராமபாணம் விடுத்தான் நாரா யணமூர்த்தி
ராமபாணம் விலக்கி நகைத்தான் அருச்சுனனும்
கத்திரி பாணமதைக் கடுகெனவே விட்டனரே
கத்திரி பாணமதைக் கையினு லறைந்துவிட்டான்
பத்துக் கணையாலே பச்சைமால் தான்விடவே
அஞ்சு கணையாலே யர்ச்சுனனும் தடுத்தான்காண்
நூறுகணை யையெடுத்து நொடிக்குமுன்னே யேவிவிட்டார்
பத்துக் கணையாலே பார்த்தன் தடுத்தனனே
ஐயா யிரங்கணையை யர்ச்சுனன்மே லேவிவிட்டார்
ஐஞ்நூறு கணையாலே அர்ச்சுனனுந் தடுத்தானே
உள்ள கணைகளெல்லாம் ஒருமித்து விட்டார்காண்
உள்ள கணைகளெல்லாம் ஒருநொடியில் தான்தடுத்தான்
சத்திவேல் கொண்டு தனஞ்சயன்மே லேவினரே
சத்திவே லாலே தனஞ்சயனுந் தடுத்துவிட்டான்
உருக்குக் கதையெடுத்து உக்கிரமாய் விட்டெறிந்தார்
உருக்குக் கதைதனையே ஒரம்பால் தான்முரித்து
எதுகாண் கோனாரே யிளைப்பறுதி யானதுதான்
இன்னமுள்ள எல்லாம் எடுத்துவிடுங் கோனாரே
மந்தை கலைந்து மாடோடிப் போகுதுகாண்
நீர்விடுத்த பாணமெல்லாம் நான்தடுத்துப் போட்டேனே
நான்விடுவேன் பாணம் நாரணரே நீர்தடுப்பீர்

என்றுசொல்ல மாயன் இருவிழியுந் தான்சிவந்து
கணைகள் பலவிடவும் கலங்காம லிந்நேரம்
அணிஅணியாய்த் தான்தடுத்து அடர்ந்து பொருதனையே
சக்கரத்தை யேவுகிறேன் தடுக்கநீ வல்லவனோ
செங்கண்மால் தான்சிவந்து செங்கையில் சக்கரத்தை
அங்கமுற வேதான் அலங்கரித்தா ரம்மானை
எடுத்து முகம்பார்த்து ஏனடா போர்விசயா
அஞ்சலென்று வைத்திருந்த அழகு மகன்மதனை
இக்கணமே கொண்டுவந்து என்கையிலே தான்கொடுத்து
உன்ற னுயிர்பிழைத்து ஓடிப் பிழையென்றார்
எம்மதிக்கும் இம்மதியோ இடையன் மதியாச்சு
பிடரி மதியெனவே பெரியோ ருரைத்தமொழி
குலவித்தை வந்துமக்குக் குறுக்கிடுதோ கோனாரே
உம்முடனே வந்த உபய தளமாண்டும்
எம்முடைய அண்ணன்மார் எம்பிமார் பட்டிடத்தில்
நாமு மிறந்தோமென்றால் நரகதிக்கு மோட்சமுண்டு
உம்மைக் கெலித்தோமென்றால் ஊழியுள்ள காலமட்டும்
எம்முடைய வம்சத்துக் கிடரிலேகாண் மாயவரே
கண்ணாரே வார்த்தையிது கண்டீரெனவுரைத்தான்
மன்னவனு ரீதுரைக்க மாயவனார் தாமறிந்து
உக்கிரமாய்த் தானெடுத்து உலகளந்தான் சக்கரத்தை
விக்கினமாய்ப் பார்த்தன்மேல் விட்டா ரிலக்காக
சக்கிரந்தான் பூமியெங்கும் தானெரித்துக் கோபமுடன்
வேகமுட னாடறுத்து வேந்தன்முன் ஓடியதே
நாகபா சந்தனையே நமஸ்கரித்துத் தானெடுத்து
விட்டா னருச்சுனனும் விண்ணவர்கள் கொண்டாட
விட்டதொரு நாகமது மேலுலகுங் கீழுலகும்
திட்டமுட னேயெரித்துச் சீறியே நாகமது
சக்கரத்தைத் தான்வெருட்டித் தான்விழுங்கி நாகமது
ஒக்கெனவே நாகமது சென்றதுவே யம்மானை
ஆயன் தனைவெருட்ட அரண்டு கதிகலங்கி
காயாம்பூ மேனியனார் கலங்கி மனந்தளர்ந்து
மாயமதாய்க் கோடு வளைத்தனர்காண் மந்திரத்தால்
நல்லதொரு மந்திரத்தால் நாகமது மீறாமல்
வில்லி யருச்சுனர்பால் மீண்டுவந்து சொல்லியதே
மைத்துனரைக் கொண்டாடி மாயவரு மந்நேரம்
மெத்த மனமகிழ்ந்து விண்ணவர்கள் கொண்டாட
கர்த்தர் மனமகிழ்ந்து காண்டீப னுகுமென்றார்
அத்தர் மனமகிழ்ந்து அமோகமென்று வாக்கருள
வித்தகமாய்ப் பார்த்தனைத்தான் மெய்யுறவே தான்தழுவி

அச்சமற வேதான் ஐவரையும் தாமெழுப்பி
மெச்சினே முங்களைத்தான் மெத்த மனமகிழ்ந்து
வண்ணமுள்ள மாயனார் வார்த்தை பலவுரைத்து
தர்ம ரெழுந்திருந்து தான்வணங்கி மாயவரைக்
கண்ணிலொற்றி மாயவரும் கைபாற் றழுவினர்காண்
புண்ணியரே எங்களைநீர் பொன்றிவிழக் கொன்றாலும்
புண்டரிகத் தாள்பெறுவோம் பொன்னுலகத் தேயிருப்போம்
ஆண்ட குருவே யடியேங்கள் செய்தபிழை
சொன்ன பிழைபொறுத்துச் சுந்தரரே காருமென்றார்
இன்று பொறுத்தருளும் எற்றமுள்ள மாயவரே
நன்றுநன்று என்றே நாரா யணர்மகிழ்ந்து
எங்கும் புகழ்பெறவே எற்றமுட னின்றநிலை
நிச்சயமா யுங்களைப்போல் நீதியுள்ளா ரில்லையென்று
மெத்த மனமகிழ்ந்து மேகவண்ணர் கொண்டாடி
வித்தகமாய் மாயன் விசயனையுங் கொண்டாடி
நிச்சயமாய் நீங்கள் நீடூழி வாழ்திரென்று
குன்றுதவில் மாயன் குருக்ஷேத் திரன்றனைநீர்
இன்றே யழையுமென்று இசைத்திட்டார் கிருஷ்ணருந்தான்
அன்று தர்மர் அழைத்தா ரவன்றனையே
உன்றன்பிழை பஞ்சவர்க்காப் பொறுத்தோம்நாம் உத்தமனே
உன்னூர்க்குப் போவென் றுரைத்தனர்காண் மாயவரும்
திண்ணமுடன் மாயன் தீர்க்கமுடனே துரைப்பார்
எப்போதும் போலே இயல்பாக வாழ்திரென்று
அப்போது மாயன் அகன்றுமெள்ளப் போகஎண்ணி
எல்லா ரையுநிறுத்தி எகினர்காண் மாயவரும்
நல்லதொரு பஞ்சவர்கள் நன்றியுடன் காத்ததுவும்
அடைக்கலமாய்க் காத்ததுவும் அடைந்துபோர் செய்ததுவும்
சடைக்கங்கை தானணிந்தார் தன்மனத்துக் கேற்கவேதான்
மன்றிற் படித்தவரும் வாகாகக் கேட்டவரும்
இன்று புகழ்பெற்று இனிதாக வாழ்ந்திருப்பார்
சத்துருக்க ளின்றிச் சகலசம்பத் துண்டாகும்
புத்திரரைப் பெற்றுப் புகழ்பெறவே வாழ்ந்திருப்பார்
பச்சைமால் பாதம் பரகதியுஞ் சேருவரே
இச்சை யுடனே யினிதூழி வாழ்ந்திருப்பார்
ஆல்போல் தழைத்து அறுகதுபோல் வேரோடி
மூங்கில்போற் சுற்ற முடியாமல் வாழ்குவரே.

பைரவநாத சுவாமி துணையாக வேண்டும். சுபம்

முற்றிற்று.

சென்னை-600 005.
120469